மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) சென்னை மாநகராட்சி லாரிகளில் கொண்டு வரப்படும் கழிவு நீர் அடையாற்றில் விடப்படுவதில்லை.

(ஆ) இப்பிரச்னை எழவில்லை.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : அடையாறைப் போன்று நுங்கம்பாக்கத்தின் கோடியில் கூவம் ஆற்றில் கழிவுநீரை மாநகராட்சியினர் விடுகிறார்கள். அதையும் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மூலக் கேள்வி அடையாறு பற்றியது. கூவம் பற்றி தனிக் கேள்வி போடவும்.

அன்னூர் குடிநீர்த் திட்டம்.

* வினா எண். 228— திரு. சொ. ந. பழனிசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழியோரக் கிராமங்களும், குடி தண்ணீர் விநியோகம் பெறும் வகையில் கோவை மாவட்டம் அன்னூருக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவது தொடர்பாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) தண்ணீர் வரும் அளவை அதிகரிக்கும் வகையில், அபிவிருத்தி வேலைகள் இந்த ஆண்டில் செய்து முடிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

(ஆ) திருப்பூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் முடிவுற்றதும், இது பற்றி தனியே பரிசீலிக்கப்படும்.

திரு. சொ. ந. பழனிசாமி : அன்னூர் பேரூராட்சியின் மக்கள் தொகை கிட்டத்தட்ட 10,000-க்கு மேற்பட்டிருக்கிறது. அங்கே தற்போது நான்கு குழாய்கள்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. அன்னூருக்கு குடிநீர் குழாய்கள் 24 தருவதாக குடிநீர் வடிகால் வாரியத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டு அன்னூர் பேரூராட்சி குறிப்பிட்ட ஒரு தொகையை அதற்காக கட்டியுள்ளதும் அரசுக்குத் தெரியுமா? அதன்படி தற்போது அமைக்கப்பட்டுள்ள குழாய்கள்போக மீதி உள்ள குழாய்கள் எப்போது அமைக்கப்படும் ?

1979 மார்ச் 5]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இப்போது திருப்பூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஏற்பாடு செய்து வருகிறது. அது முடிந்த பிறகு அன்னூர் பேரூராட்சி மேம்பாட்டுத் திட்டச் செலவில் ஒரு பங்கையும் பராமரிப்புச் செலவையும் திருப்பூர் ஊராட்சி செலுத்த முன்வருமானால் அன்னூருக்குக் கூடுதலான எண்ணிக்கையில் புதுக் குழாய் இணைப்புகள் அளிப்பதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. கு. ரமணி : மேட்டுப்பாளையம் ஆற்றிலிருந்து திருப்பூருக்குச் செல்லும் அந்தத் தண்ணீர் குழாய்த் திட்டத்தை விரிவுபடுத்தினால் அன்னூர் நகரத்திற்குத் தண்ணீர் கொடுக்க முடியும். அந்த முறையில் அரசாங்கத்தினிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா? அப்படி இருக்கிறது என்று சொன்னால் எந்தச் சமயத்திற்குள் அந்தத் திட்டம் முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : வழியோரக் கிராமங்களுக்குக் குடிநீர் கண்டிப்பாகக் கொடுக்கப்படும் என்று ஏற்கெனவே அரசு உறுதி கூறியிருக்கிறது. ஆனால் சில பகுதிகளுக்கு, சில கிராமங்களுக்கு அவ்விதம் தண்ணீர் கொடுக்கப்படுவதில்லை. அந்தக் குறையை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பெரிய திட்டம் நிறைவேற்றும்போது பாதையில் உள்ள வழியோரக் கிராமங்கள் ஒவ்வொன்றுக்கும் 'டி' குழாய் என்பதை வைத்துப் பொருத்தி விட்டு வேலை முடிக்கிறோம். அந்தந்தக் கிராமப் பஞ்சாயத்து பணம் கொடுக்கும்போது அந்த 'டி' யிலிருந்து உடனடியாக எவ்வளவு விரைவில் தண்ணீர் கொடுக்கமுடியுமோ, முடிந்தவரை இரண்டு மூன்று தினங்களுக்குள்ளாகவே கூட கொடுக்க ஏற்பாடு செய்ய இந்த அரசு எண்ணி இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : தமிழ்நாட்டில் எந்தெந்த பெரிய நகரங்களுக்கு நீர் வசதி வழங்கப்பட்டிருக்கிறது, எந்தெந்த நகரங்களுக்கு வழங்கப்படாமல் இருக்கிறது என்பது அறிவிக்கப்படுமா? மதுராந்தகம் நகரத்திற்கு எங்கள் காலத்தில் அத்திட்டம் வழங்கப்பட்டு இன்னும் அங்கே குடிநீர் வழங்கப்படாமல் இருக்கிறது. அது எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் தர ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வழியோரக் கிராமங்களைப்பற்றிய கேள்வி. உங்கள் ஊர் நகராட்சி.

அருப்புக்கோட்டை குடிநீர்த் திட்டம்.

* வினா எண். 229—திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை குடிநீர் திட்டத்தின்கீழ் நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆவரங்குளம், புல்வாய்க்கரை போன்ற பெரிய கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) தற்பொழுது அருப்புக்கோட்டை குடிநீர் திட்ட நீரேற்றுக் குழாயிலிருந்து புல்வாய்க்கரை கிராமத்திற்கு இரட்டை பொதுக் குழாய் அமைத்து அதன் வாயிலாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆவரங்குளம் (என்ற பிள்ளையார்குளம்) அருப்புககோட்டைக் குடிநீர்த் திட்டத்திலுள்ள வழிப்புற கிராமங்களில் ஒன்று. கிராமக் குடிநீர் திட்டத்தின்கீழ் புல்வாய் கரை, ஆவரங்குளம் ஆகிய இரு கிராமங்களுக்கும் அருப்புக் கோட்டை குடிநீர் திட்ட நீரேற்றுத் திட்டத்திலிருந்து முழு அளவில் குடிநீர் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : அருப்புக்கோட்டைப் பகுதியில் குடிநீர் எடுப்பதற்கு என்று போடப்பட்ட குழாய்கள் எல்லாம் விவசாயிகளால் உடைக்கப்பட்டு இதுவரை குடிநீர்த்திட்டம் முதுகளத்தூர், பரமக்குடி போன்ற பகுதிகளில் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே அருப்புக்கோட்டைக்குக் கொடுப்பதுபோல் வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து முதுகளத்தூர், பரமக்குடி பகுதிகளுக்கும் தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.